DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
STC-145/2019
Prosecution witness – PW.1

| | | |
|---|---|---|
| Name | : திரு. பாலமுருகன் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

( All accused present.)
13.12.2023 – 01.00 PM

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது விளாத்திக்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தலைமை நில அளவையாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2019 ம் ஆண்டு கடலாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தேன்.

2. ஆஜர் எதிரிகளைத் தெரியும். சம்பவத்தன்று பார்த்துள்ளேன். கடந்த 20.03.2019 ம் தேதி மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் W.P (MD).No. 23121/2017 என்ற உத்தரவின் படி வேப்பங்குளம் கிராமத்தைச் சேர்ந்த பொன்னுத்தேவர் என்பவரது இடத்தை அளப்பதற்காக நானும், குறுவட்ட அளவையர் திரு. செந்தில்குமார், வருவாய் ஆய்வாளர் திரு. மனோகரன், பெருநாழி காவல்நிலைய போலீசார் சுமார் 10 பேர் வீதம் வேப்பங்குளம் கிராமத்திற்கு சென்றோம்.

3. நாங்கள் இடத்தை அளப்பதற்காக சென்ற போது ஆஜர் எதிரிகள் அளக்கவிடாமல் தகராறு செய்தார்கள். அளக்க வந்த இடம் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லி தடுத்துவிட்டார்கள்.

4. பின்னர் அளக்க முடியாமல் திரும்பி சென்று, பெருநாழி காவல்நிலையத்தில் தடுத்த நபர்கள் மீது புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் கொடுக்கப்பட்டது. அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் சம்பவம் குறித்து என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் முதல் விசாரணையில் கூறிய விபரங்களைத் தான் போலீஸ்

விசாரணையிலும், புகாரிலும் தெரிவித்துள்ளேன். சம்பவம் காலை சுமார் 11.00 மணிக்கு நடந்தது.

2. சம்பவ இடம் ஊருக்குள் தான் உள்ளது. சம்பவத்தை ஊர்க்காரர்கள் சுமார் 20 நபர்கள் பார்த்திருப்பார்கள். நான் சம்பவ இடத்தை பார்வையிடுவதற்காக 1ம் எதிரிக்கு அளித்த நோட்டீஸை போலீஸ் விசாரணையின் போது தாக்கல் செய்துள்ளேன்.

3. அந்த நோட்டீஸில் உயர்நீதிமன்ற உத்தரவை குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை. வட்டாட்சியர் நடவடிக்கை உத்தரவை விசாரணையின் போது போலீசாரிடம் சமர்ப்பித்தேன்.

4. மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் உடனடியாக சம்பவ இடத்தை அளக்க நான் செல்லவில்லை. எவ்வளவு நாட்கள் காலதாமதமாக சென்றேன் என்று எனக்கு ஞாபகமில்லை.

5. மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவில் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் நான் சம்பவ இடத்தை பார்வையிடவில்லை என்றால் சரியல்ல. நான் குறிப்பிட்ட நாட்களுக்குள் பார்வையிடாமல் இருந்ததால் பொய்யாக எதிரிகள் மீது புகார் அளித்து, காலதாமதத்திற்கு காரணம் கூறுவதற்காக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. சம்பவ இடத்தில் காவலர்கள் இருந்தார்கள். அவர்கள் தடுக்கவில்லை என்றால் சரியல்ல. சத்தம் போட்டார்கள். புகார் அளிக்க சொன்னதன் அடிப்படையில் புகார் அளித்தேன்.

7. சம்பவம் நடந்த மறுநாள் புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்றே நான் புகார் அளித்தேன். அதன்பின்னர் சம்பவ இடத்தை நாளது தேதி வரை அளவீடு செய்யவில்லை.

8. எதிரிகள் மீது பொன்னுத்தேவர் தரப்பில் இருந்து நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று எனக்குத் தெரியாது. பொன்னுத்தேவர் நிலத்தை அளக்க அதன்பின்னர் என்னை தொடர்பு கொள்ளவில்லை. நான் 2019 ஜூன் மாதம் வரை கடலாடி தாலுகாவில் பணியில் இருந்தேன்.

9. 1ம் எதிரி தரப்பில் மேற்படி இடத்தை அளவீடு செய்து கொடுக்க மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் WP(MD).NO.7351/2019 மனு தாக்கல் செய்து மேற்படி மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் இடத்தை அளவீடு செய்யவில்லை என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது.

10. எதிரிகள் இடத்தை அளக்க தற்போதும் தயராக இருக்கிறார்கள் என்றும் அதனால் தான் மாண்பமை உயர்நீதிமன்றத்தை அணுகி உத்தரவு பெற்றுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

11. பொன்னுத்தேவர் டி.வேப்பங்குளம் கிராமத்தில் முன்னாள் ஊராட்சி மன்ற துணைத்தலைவராக இருந்து வந்தார் என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

12. நான் அளித்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.

ள